THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, the 2nd July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCE TO Dr. B. C. ROY AND SRI PURUSHOTHAMDAS TANDON.

MR. SPEAKER: I regret to announce the death of Dr. B. C. Roy, Chief Minister of West Bengal yesterday afternoon. He was one of the top-ranking politicians of the country, a great Chief Minister and also an eminent physician. On behalf of the House I will convey its deep sense of sorrow to the people of West Bengal.

I regret also to announce the death of Sri Purushothamdas Tandon. He also was a great leader. He was the Speaker of the Uttar Pradesh Legislative Assembly. On behalf of the House, I will convey its deep sense of sorrow to the family of Sri Tandon.

As a mark of respect to the departed souls, I request hon. Members to stand in silence for a minute.

The House stood in silence for a minute.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: Questions Nos. 70, 74, 78, 82, 83, 84, 85 and 86-A have been postponed at the request of the concerned Ministers.

அரசாங்கக் கல்லூரி (திருவண்ணாமலை)

*6. கேள்வி.—திரு. ஏ. ஆறுமுகம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ல் திருவண்ணாமலையில் சர்க்கார் துறையில் ஒரு கல்லூரி திறக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

திரு. ஏ. ஆறுமுகம்: ஸார், திருவண்ணாமலையிலும், அதன் சுற்றுப்புறத்தில் உள்ள தாலூக்காக்களிலும் அநேக உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள காரணத்தினாலே, அங்கே ஒரு கல்லூரி இருக்க வேண்டியது அத்தியாவசியம் என்று கருதுகிறேன். அதற்காக அங்கே அரசாங்கம் ஒரு கல்லூரியை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா?